24th July 1957] [Sri R. Venkataraman]

1/3 பங்கு, அதாவது $8\frac{1}{2}$ கோடி கெஜம், கூட்டுறவு முறையில் நெய்யப்படுவது ஆகும். கைத்தறி நெசவுத் தொழில் விஷயத்தில், ஸெஸ் பண்டு கொடுக்கும் முறையைப்பற்றி சில கனம் அங்கத்தினர்கள் குறை கூறினார்கள். ஆனால், ஸெஸ் பண்டு கொடுக்கப்படுவதால், பொதுவாக, கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதையும் நெசவாளர்களின் வாழ்க்கை நிலை ஓரளவு உயர்ந்திருக்கிறது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. இது விஷயமாக ஒரே ஒரு குறைப்பாடு தான் எல்லோராலும் சொல்லப்பட்டது. அதாவது, ஸெஸ் பண்டின் மூலம் தனித் தறிகள் வைக்கப்பட்டிருப்பதாகவும். மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு போதிய சலுகைகள் கிடைக்காமல் இருப்பதாகவும் குறை கூறப்பட்டது. மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்பவர்களுக்கு ஏன் சலுகைகள் கிடைப்பதில்லை என்பதை குறை கூறும் கனம் அங்கத்தினர்கள் ஒருவாறு அறிவார்கள். ஏதோ ஒரு சிலர் துஷ்பிரயோகம் செய்த காரணத்தால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று முன்பு இருந்த நிலைமை இப்போது மாறிவிட்டது. இருந்தாலும், சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்களாக இருந்தாலும் சரி, தனித் தறியில் நெய்யும் நெசவாளர்களாக இருந்தாலும் சரி, மாஸ்டர் வீவர்களிடத்தில் வேலை செய்யும் நெசவாளர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லோருக்கும் சலுகை கிடைக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கையாக இருக்கிறது. இதை அகில இந்திய (மத்திய) போர்டில் வற்புறுத்துவதற்கு நமது பிரதிநிதிகள் அவ்வப்போது அங்கே சென்று வந்திருக்கிறார்கள். இதை எப்படி நிறைவேற்றுவது என்று அகில இந்திய போர்டு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதன் முடிவு பிறகு தெரியும்.

MR. SPEAKER: Now the Hon. Minister for Industries will have to move a motion for the extension of time till he finishes his speech.

VII.—GOVERNMENT MOTION—MOTION FOR SUSPENSION OF RULE 154 (3) OF THE ASSEMBLY RULES.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That rule 154 (3) of the Assembly Rules be suspended till the reply to the Demand XXI—Industries and Cinchona is over."

MR. SPEAKER: The question is—

"That rule 154 (3) of the Assembly Rules be suspended till the reply to the Demand XXI—Industries and Cinchona is over."

The motion was put and carried.

VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957–58—*cont.*

(1) DEMAND XXI—INDUSTRIES AND CINCHONA.

(2) DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT—*cont.*

THE HON. SRI R. VENKATARAMAN: அதற்கு மேலாக பல இடங்களில் விற்பனை செய்வதற்கான சேல்ஸ் டெப்போக்கள் ஆரம்பிப்பதற்கு வெகுவாக முயற்சிகள் நடந்து வருகின்றன. புதிதாக 250 டெப்போக்களை ஏற்படுத்துவதற்கு இப்போது திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே துணித் தேக்கம் ஏற்படும் கஷ்டம் இருக்காது. குறிப்பாக கனம் ராமச்சந்திரன் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லாவில் துணித்தேக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதை நான் ஓரளவு ஒத்துக் கொள்ளுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கிறபோது ராமநாதபுரத்தில், அதாவது ஸ்ரீ ராமச்சந்திரன் சொன்ன கைத்தறி தேக்கமானது இந்த ராஜ்யத்தில் விற்பனை ஆகக் கூடிய சேலைகள், வேஷ்டிகள் போன்றவை அல்ல. பம்பாய் ராஜ்ய பிரதேசத்தில் அதிகமாக விற்பனை ஆகக்கூடிய